**அம்பாந்தோட்டை பிரதேச சபை**

**அம்பாந் தோட்டை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 168(1) இன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிற்முரிய நிதிக்கூற்றுக்கள் அடுத்துவரும் ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டியிருந்த போதிலும் மிளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் கொடுக்கல் வாங்கல் மற்றும் செயலாற்றல் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் தொடர்பான கருத்துரைகள்**

---

**1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

கீழே குறிப்பிடப்படுகின்ற இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 571(3) | ரூபா 250,818 தொகையான காலாவதியான வைப்புக்கள் தெதாடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி

| | |
|---|---|
| விதி 218 | சபைக்குச் சொந்தமான சகல காணியும் கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு தடவை மெய்மையாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

(இ) சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய 02.∴2011 ஆம் இலக்க ஒய்வூதியச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி | சகல உள்ளூராட்சி நிறுவனங்களினாலும் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற பதவியணியினர்களுக்கு அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிக்கும் நியமனம் வழங்குவதற்காகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அதற்கு முரணாக ஒன்பது ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதிய நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

#### 2.1.1 அனுமதிப்பத்திரக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(2) ஆம் பிரிவின் பிரகாரம் பல்வேறு தொழில்கள் தொடர்பாக அனுமதிப்பத்திரக் கட்டணம் விதித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் சட்டம், வைத்தியத்துறை, நொத்தரிஸ் மற்றும் பதிவாளர் போன்ற தொழில்களிலிருந்து 2014 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து இறக்கப்படுகின்ற வாகனங்களை தரித்து வைத்தல் தனியார் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த இடத்தில் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடக்

கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.2 பொதுச் சந்தையை வாடகைக்கு விடல்

----------------------------------------------------------------

நவ மயுராபுர வாராந்த சந்தை 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 25,200 தொகையில் கேள்வி கோரி வாடகைக்கு வழங்கப்பட்ருந்ததுடன் உரிய பிரகாரம் தவணைப்பணம் அறவிடப்படாமையினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 23,100 தொகையான நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 விநோத வரிகள்

-----------------------------

அம்பாந்தோட்டை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள உலர் வலய தாவரவியல் பூங்காவிலும் பறவைகள் சரணாலயத்திலும் விற்பனை செய்யப்படுகின்ற நுழைவுச்சீட்டிலிருந்து விநோத வரியாக வருமானமொன்றை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 3.1 வாகனக் கட்டுப்பாடு

---------------------------------

சபைக்குச் சொந்தமான 252-6542 ஆம் இலக்க கெப் வண்டிக்குரிய 2014 ஆம் ஆண்டின் ஓட்ட அட்டவணையின் பிரகாரம் உறுப்பினர்களினால் எழுத்துமூல வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்படாமல் 20,459 கிலோ மீற்றர் தூர அளவை 2607 லீற்றர் எரிபொருளைப் பயன்படுத்தி பிரமாணம் செய்திருந்ததுடன் உறுப்பினர்களின் கடமைகளுக்காக மாதாந்த எரிபொருள்படியும் மோட்டார் சைக்கிலும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கும் போது இந்த கெப் வண்டியை பயன்படுத்துவதற்கான அவசியம் என்னவெனக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டில் தலைவரின் ஆலோசனையின் பிரகாரம் கடமைகளில் ஈடுபட்டதாகக் காண்பித்து 14 சந்தர்ப்பங்களில் 3280 கிலோ மீற்றர் தூரம் ஓடியிருந்த போதிலும், வாகனத்தைப் பயன்படுத்தியவரின் கையொப்பம் இடம்பெற்றிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------

(அ) பல்நோக்கு நடமாடும் கூடாரம்

-------------------------------------------------

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சிலிருந்து 2013 இன் பாதீட்டு முன்மொழிவின் மூலம் அமுல்படுத்தப்பட்ட மாகாணங்களில் வறுமையைக் குறைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 கூடாரங்கள் சபைக்கு கிடைத்திருந்ததுடன் 2015 சனவரி 20 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அந்த 06 கூடாரங்களும் களஞ்சியத்தில் இருந்ததுடன் 02 கூடாரங்கள் வெளிநபரொருவரினால் கோரப்பட்ட எழுத்துமூல கோரிக்கையின் அடிப்படையில் காசு அடிப்படையின்றி வழங்கப்பட்டிருந்ததாக செயலாளர் அறிவித்திருந்தார். எஞ்சிய 02 கூடாரங்கள் தொடர்பான எந்தத் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி விளக்கு பராமரித்தல் செலவினம்

--------------------------------------------------------------

2014 ஆம் ஆண்டில் சபையின் மூலம் வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக இலங்கை மின்சார சபையிலிருந்து மீளளிப்புச் செய்ய வேண்டிய ரூபா 248,441 தொகை 2014 திசெம்பர் 31 வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

-----------------------------------------------------------------------------------

2014 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் பாதீட்டு முன் மொழிவின் மூலம் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபைக்கு ரூபா 12,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,000,000 தொகை சபைக்குக் கிடைத்திருந்தது. இந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சபையினால் உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய தவணைப் பணம் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவங்களில் 16 வேலைகளுக்காக இறுதிக் கொடுப்பனவு கோரப்பட்டிருந்த போதிலும், ரூபா 10,000,000 கூட்டுத்தொகையான இரண்டு வேலைகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ஆ) மானஜ்ஜாவ தெமட்டஅத்த வெவ வீதி

---

மானஜ்ஜாவ தெமட்ட அத்தவெவ வீதியில் திரு கறனேரிஸ் அப்புவின் வீட்டின் அருகிலுள்ள வீதி 1 மற்றும் 2 ஆம் கட்டங்களில் 2014 யூன் 30 மற்றும் 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதிகளில் ரூபா 500,000 வீதம் ரூபா 1,000,000 உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு கையளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் 2015 சனவரி 21 ஆந் திகதி இந்த வேலையின் களப்பரிசோதனையின் போது வீதியின் அனே இடங்கள் கீழிறங்கியும், வெடித்தும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) தரப் பரீட்சிப்புக் கட்டணம் செலுத்துதல்

---

ஒப்பந்தக்காரர்களினால் கொங்ாரீட் சிறுகற்கள் இட்டு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற வீதிகளின் தரப் பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உள்ளபடியான செலவினத்தைக் கவனத்தில் கொள்ளாது வேலைப்பூர்த்தி அறிக்கையில் அதில் அதிகரித்த வருமானமொன்று உள்ளடக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டுகளின் போது ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யும் போது ரூபா 342,693 தொகை அதிகரித்துக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது

(அ) கணக்கீடு

(ஆ) சொத்தக்கள் முகாமைத்துவம்

(இ) வருமான நிர்வாகம்